**FIRST INFORMATION REPORT**
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

C 8066902

1. District மாவட்டம்: Nilgiris    PS: காவல்நிலையம்: V & AC.    Year: ஆண்டு 2019    FIR No.: மு.த.அ. எண் 4/19    Date: நாள் 29.04.19

2. (i) Act சட்டம்: PC (Amendment) Act, 2018    Sections பிரிவுகள்: 8 & 102 Cr. PC
(ii) Act சட்டம்: Cr. PC    Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் 01.11.18    Date to : நாள் வரை
Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல் Prior to 1500 hrs    Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.11.2018    Time : நேரம் 2000 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  Written Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் PWD office, Udhagamandalam about 1km North West.
Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் H. Prakash,    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு    (d) Nationality : நாட்டினம் Hindu    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Huzur Sarishtadar,    (g) Address : முகவரி i/c District Inspection Cell Officer, District Collectorate, Udhagamandalam, the Nilgiris

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) R. Gopalakrishnapillai, Contractor
2) V. Muneswaran, Assistant Section Officer Chamraj Estate (Private Pers.)
3) R. Suresh kumar, Assistant Section Officer Chamraj Estate (Private Pers.)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
Delay due to obtaining approval from the Directorate of Vigilance & Anti Corruption, Chennai.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21-3-16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

29/4/19 (K. PRAKASH)

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Geethalakshmi 29/4/19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 29.04.2019
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் பி. கீதாலட்சுமி
Rank: நிலை ..................No. எண் .......
காவல் ஆய்வாளர்
உளவுத் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
நீலகிரி மாவட்டம்.

<u>ஊ.த.க. பிரிவு கு.எண்.4/2019/AC/NI வழக்கின் முதல் தகவல் அறிக்கை:</u>

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

கடந்த 01.11.2018-ம் தேதி சுமார் 20.00 மணிக்கு காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி மாவட்டம் B.கீதாலட்சுமி ஆகிய நான் அலுவலகத்தில் இருக்கும்போது நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்), பொறுப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம் திரு.H.பிரகாஷ் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 01.11.2018-ம் இணைத்து கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் H.பிரகாஷ், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்) மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். அம்மையீர் பொருள்: திடீர் தணிக்கை - நடவடிக்கை கோருதல் - சம்மந்தமாக. இன்று 01.11.2018-ம் தேதி நீலகிரி மாவட்ட ஆட்சியர் எனக்கு அளித்த உத்தரவின் படி உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் மற்றும் பார்ட்டி சகிதம், உதகமண்டலம் பொதுப்பணித்துறை கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்டம் மற்றும் கோட்ட அலுவலர்களும், ஊழியர்களும் வருகின்ற தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஒப்பந்ததாரர்களிடம் அவர்கள் செய்து கொடுத்த மற்றும் செய்து கொடுக்கவிருக்கின்ற அரசு பணிகளுக்கு லஞ்சமாக பணம் கேட்டுப்பெறுவதாக கிடைக்கபெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் இவ்வலுவலகத்தை இன்று 15.00 மணிமுதல் 19.00 மணிவரை திடீர் தணிக்கை செய்தேன். இது சம்மந்தமாக தயாரிக்கப்பட்ட நடவடிக்கையை இத்துடன் இணைத்துள்ளேன். இந்த திடீர் தணிக்கையின் போது மேற்படி அலுவலக அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் லஞ்சமாக கொடுக்கவிருந்த மற்றும் தகுந்த முகாந்திரம் சொல்லாத பணம் ரூ.2,01,560/- ஒப்பந்ததாரர் திரு.R.கோபாலகிருஷ்ணபிள்ளை என்பவரிடமிருந்தும், திரு.முனீஸ்வரன் மற்றும் திரு.சுரேஷ்குமார் ஆகியோரிடமிருந்தும் கைப்பற்றப்பட்டது. எனவே உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்

29/4/19

கொள்கிறேன். ஒப்பம் H.பிரகாஷ். Submitted Received the above complaint along with proceedings and submitted the same to DVAC, Chennai for necessary orders. ஒப்பம் B.Geethalakshmi, 01.11.2018, காவல் ஆய்வாளர், ஊ.த.க.துறை, உதகமண்டலம். PTO Submitted On orders from DVAC, Chennai vide SC.No.39735/2018/PWD/NI dated 11.04.2019 a case in VAC, The Nilgiris Cr.No.4/2019/AC/NI was registered u/s 8 of PC (Amendment) Act, 2018 and 102 Cr.PC on 29.01.2019 at 11.30 hrs ஒப்பம் B.Geethalakshmi, 29.01.19, காவல் ஆய்வாளர், ஊ.த.க.துறை, நீலகிரி மாவட்டம். செயல்முறை நடவடிக்கைகள் பின்வருமாறு: Proceedings of the Surprise Check conducted on 01.11.2018 between 15.00 hrs and 19.00 hrs at Public Works Department, Udhagamandalam, the Nilgiris District. முன்னிலை: 1) திரு.H.பிரகாஷ், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். 2) திருமதி.B.கீதாலட்சுமி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். இன்று 01.11.2018 ஆம் தேதி நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்), திரு.H.பிரகாஷ், ஆகிய நான், நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்கள் அளித்த உத்தரவின்படி நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி என்பவரும், உதகமண்டலம் தாவரவியல் பூங்கா சாலையில் அமைந்துள்ள பொதுப்பணித்துறை கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம் & உபகோட்டம், பிரிவு அலுவலகத்திலுள்ள அலுவலர்களும், ஊழியர்களும் வரவிருக்கின்ற தீபாவளி பண்டிகையை முன்னிட்டு இந்த அலுவலக ஒப்பந்ததாரர்களிடம் அவர்களுக்கு செய்து கொடுத்த மற்றும் கொடுக்கவிருக்கின்ற பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களுக்கு சாதகமாக செய்து கொடுக்க லஞ்சமாக பணம் கேட்டுப் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் மேற்படி அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. திடீர் தணிக்கை சகிதம் உதகமண்டலம் பொதுப்பணித்துறை கட்டிட கட்டுமான மற்றும் பராமரிப்பு உபகோட்ட அலுவலகத்திற்குள் நுழைந்தபோது

29/4/19

முதலாவதாக உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திற்குள் நுழைந்தபோது உதவி செயற்பொறியாளர் அறைக்கு பின்புறமாக கண்காணிப்பாளர் திரு.A.ஷாஜஹான் என்பவர் அவருடைய இருக்கையில் இருந்தார். அவரிடம் எங்களை அறிமுகம் செய்துக்கொண்டு அவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே தன்னுடைய பேண்டின் இடதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.1,150/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அது அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக அவருக்கு அருகே இருக்கையில் இருந்த திரு.A.பிரபு என்பவரை தணிக்கை செய்ய அவரிடம் பணம் ரூ.1,100/- இருந்தது. அவரைப்பற்றி விசாரிக்க தான் NMR ஆக பணிபுரிந்து வருவதாகவும், அவருக்கு மாதச்சம்பளம் ரூ.8,000/- என்றும், அதை நகர் பொறியாளர் திரு.ராகுல் என்பவர் கொடுத்துவருவதாகவும், தான் கணிணியில் வேலை செய்து வருவதாகவும், மேற்படி தொகை அவருடைய சொந்த பணம் என்றும் சொன்னார். எனவே, அந்த பணமும் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக உதவி செயற்பொறியாளர் அறைக்குச் செல்ல உதவி செயற்பொறியாளர் இருக்கை காலியாக இருந்தது. உதவி செயற்பொறியாளர் திரு.K.ரத்தினவேல் என்பவர் பணித்தளத்திற்கு சென்றுவிட்டதாக திரு.ஷாஜஹான் கூறினார். அடுத்ததாக உதவி செயற்பொறியாளர் அறைக்கு அருகில் இருந்த அலுவலக அறைக்குச்செல்ல அங்கு உதவியாள் திருமதி.மேரி அனுஷ்யா என்பவரும், தினக்கூலி பணியாளர் திரு.C.பால்ராஜ் என்பவரும் இருந்தனர். திருமதி.மேரி அனுஷ்யா என்பவரை தணிக்கை செய்ய அவரிடம் ரூ.4,400/- பர்சில் இருந்ததை தானாகவே எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்று கூறியதால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக திரு.பால்ராஜை தணிக்கை செய்ய அவர் தானாகவே தனது இடதுசட்டை பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.460/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இருந்த மருத்துவ உபகோட்டத்திற்குள் செல்ல, அதன் உதவி செயற்பொறியாளர் திரு.செல்வராஜ், திருப்பூரில் அலுவலாக இருப்பதாக திரு.ஷாஜஹான் தெரிவித்தார். அடுத்ததாக

Geethalakshmi
29/4/19

அவருடைய அலுவலக அறையில் உதவியாளர் திரு.A.சிசுபாலன், பணி ஆய்வாளர் திரு.R.பிரபு மற்றும் தினக்கூலி பணியாளர்கள் திரு.A.ஆனந்தகுமார், திரு.W.நிக்கி குருஸ் ஆகியோர்கள் இருந்தனர். இவர்களை தணிக்கை செய்ய திரு.சிசுபாலனிடம் பணம் ரூ.80/-, திரு.பிரபுவிடம் பணம் ரூ.1,950/-ம், திரு.ஆனந்தகுமாரிடம் பணம் ரூ.10,500/-ம் மற்றும் திரு.நிக்கி குருஸிடம் பணம் ரூ.220/-ம் இருந்தது. அது அவர்களுடைய சொந்த பணம் என்பதால், அது அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக எதிரே இருந்த நகர பிரிவு அலுவலகத்திற்குள் செல்ல அங்கு முன்புற அறையில் குன்னூர் பொதுப்பணித்துறையில் உதவி பொறியாளரான திரு.S.P.ஜெயங்கொண்டான் என்பவரும் NMR ஆன திருமதி.R.லீலா என்பவரும் இருந்தனர். நகர பிரிவு உதவி பொறியாளர் திரு.R.P.ராகுல் திருச்சி சென்றுள்ளதாக திரு.ஷாஜஹான் தெரிவித்தார். திரு.ஜெயங்கொண்டான் என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே தன்னுடைய பேண்டின் வலதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.4,330/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்று சொன்னதால் அது அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக திருமதி.லீலா என்பவரை தணிக்கை செய்ய அவர் தன்னுடைய ஹேண்ட் பேக்கிலிருந்து பணம் ரூ.4,400/-ஐ தானாகவே எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்று சொன்னதால், அது அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் நகர பிரிவு அறைக்கு அருகே நின்றுக் கொண்டிருந்த திரு.V.முனீஸ்வரன் என்பவரையும், திரு.R.சுரேஷ்குமார் என்பவரையும் பற்றி விசாரிக்க இருவரும் சாம்ராஜ் எஸ்டேட்டில் உதவி பிரிவு அலுவலர்களாக பணிபுரிந்து வருவதாகவும், அவர்களுடைய சேர்மேன், ஹெலிகாப்டர் மூலமாக உதகமண்டலத்திற்கு வரும் 03.11.2018-ஆம் தேதி வரவிருப்பதாகவும் ஹெலிபேட் உள்ள இடமானது பொதுப்பணித்துறைக்கு சொந்தமானதால், பொதுப்பணித்துறை செயற் பொறியாளரிடம் அனுமதி பெறவேண்டும் என்றும், அதற்காக வந்ததாகவும் கூறினர். அவர்கள் இருவரையும் தணிக்கை செய்ய திரு.முனீஸ்வரன் தன்னுடைய இடது சட்டை பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.18,200/-ஐயும், திரு.சுரேஷ்குமார் தன்னுடைய பேண்டின் வலதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.4,800/- ஐயும் எடுத்து ஆஜர்

Jeyaseetha Lakshmi
29/4/19

செய்தார்கள். அதுபற்றி விசாரிக்க முன்னுக்குப்பின் முரணாக சரியான முகாந்திரம் சொல்லாததால் அந்த தொகைகள் ரூ.23,000/- கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக இருந்த மருத்துவ பிரிவு உதவி பொறியாளர் அறையில் யாரும் இல்லை. அதற்கு அடுத்ததாக ஆளுநர் மாளிகை பிரிவிற்குச் செல்ல அங்கு உதவி பொறியாளர் இருக்கை காலியாக இருந்தது. அவர் பற்றி விசாரிக்க உதவி பொறியாளர் திரு.S.கௌதம் பணித்தளத்திற்கு சென்றுள்ளதாக திரு.ஷாஜஹான் கூறினார். பின்னர் அந்த அறையில் பணி ஆய்வாளர் திரு.G.சாம்சன் ஆரோக்கியநாதன் என்பவர் அவருடைய இருக்கையில் இருந்தார். அவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே தன்னுடைய வலதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூ.7,900/- மற்றும் ரூ.1,200/- இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். ரூ.7,900/- அரசுக்கு செலுத்த வேண்டிய வாடகை தொகை என்றும் ரூ.1,200/- தன்னுடைய சொந்த பணம் என்றும் சொன்னதால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக அங்கிருந்த NMR ஆக பணிபுரியும் திரு.B.S. சந்திரமகாலிங்கம் என்பவரை தணிக்கை செய்ய, அவர் தன்னிடம் பணம் எதுவுமில்லை என்று தெரிவித்தார். அடுத்ததாக அங்கிருந்த NMR ஆக பணிபுரியும் திரு.M.பிரகாஷ் என்பவரை தணிக்கை செய்ய அவர் தன்னிடம் பணம் எதுவுமில்லை என்று கூறினார். அடுத்ததாக இருந்த ஊட்டி கிரிக்கெட் கிளப்பை அடுத்து இருந்த பொதுப்பணித்துறை கோட்ட அலுவலகத்திற்குள் சென்று பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அறைக்கு செல்ல அவருடைய இருக்கை காலியாக இருந்தது. அங்கு அலுவலக உதவியாளர் திரு.T.மகாலிங்கம் என்பவர் இருந்தார். செயற்பொறியாளரைப்பற்றி விசாரிக்க செயற்பொறியாளர் திரு.V.ரவி பணித்தளத்திற்கு சென்றுவிட்டதாகக் கூறினார். செயற்பொறியாளர் அறைக்கு எதிரே இருந்த அலுவலக அறைக்குச் செல்ல முன்புறம் இருந்த இருக்கையில் இளநிலை வரை தொழில் அலுவலர் திரு.T.தங்கராஜ் என்பவர் இருந்தார். அவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே தன்னுடைய வலதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்த பர்சை எடுத்து பணம் ரூ.1,500/-ஐ ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால், அது அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவருக்கு எதிரே இருந்த இருக்கையில் இளநிலை வரை

Jayalakshmi
29/4/19

தொழில் அலுவலர் திரு.M.ஜான் கென்னடி என்பவர் இருந்தார். அவரை
தணிக்கை செய்ய அவர் தானாகவே தனது வலதுபுற பேண்ட் பாக்கெட்டில்
இருந்த பர்சில் இருந்த பணம் ரூ.1,500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது
அவருடைய சொந்த பணம் என்று சொன்னதால், அது அவரிடமே திருப்பி
கொடுக்கப்பட்டது. அதனை அடுத்து NMR ஆக பணிபுரியும்
திருமதி.R.விஜயராணி என்பவர் அவரது இருக்கையில் அமர்ந்திருந்தார்.
அவரை தணிக்கை செய்ய அவர் தன்னுடைய பர்சிலிருந்து பணம் ரூ1,000/-ஐ
எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்பதால்
அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இருந்த கம்ப்யூட்டர்
டேபிளின் எதிரே இருந்த இருக்கையில் உதவியாளர் திரு.N.சந்திரசேகர்
என்பவரும் அவரை ஒட்டி இருந்த பிளாஸ்டிக் சேரில் ஒப்பந்ததாரர்
திரு.R.கோபாலகிருஷ்ணபிள்ளை என்பவரும் அமர்ந்திருந்தனர்.
திரு.N.சந்திரசேகரை விசாரிக்க அவர் தான் உபகோட்ட அலுவலகத்தில்
உதவியாளராக பணிபுரிவதாகவும், தற்போது நிறுவன செலவின
அறிக்கையை கொடுக்க இங்கு வந்திருப்பதாகவும் சொன்னார். அவரை
தணிக்கை செய்ய அவர் தனது இடது பேண்ட் பாக்கெட்டிலிருந்த
பர்சிலிருந்து பணம் ரூ.1,630/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அடுத்தாக அங்கு
பிளாஸ்டிக் சேரில் அமர்ந்திருந்த ஒப்பந்ததாரர்
திரு.R.கோபாலகிருஷ்ணபிள்ளை என்பவரை விசாரிக்க, அவர் தான் செயற்
பொறியாளர் திரு.V.ரவியை சந்திக்க வந்ததாக கூறினார். அவரை தணிக்கை
செய்ய அவர் தானாகவே தான் அணிந்திருந்த கோட்டின் உள்புற வலது
பாக்கெட்டில் இருந்து மூன்று கட்டுக்களாக பணம் ரூ.1,69,500/- எடுத்து
ஆஜர் செய்தார். இதுபற்றி அவரிடம் கேட்க, முதலில் முன்னுக்குப்பின்
முரணாக பதில் சொல்லி பின்னர் இந்த பணம் இந்த உதகமண்டலம்
பொதுப்பணித்துறை கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு துறை அலுவலக
அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் தான் செய்து கொண்டிருக்கும் மற்றும்
செய்த, செய்யப்போகிற ஒப்பந்த வேலைகளுக்கு தனக்கு சாதகமாகச்
செய்ய அவர்களுக்கு லஞ்சமாக கொடுக்கவிருந்த பணம் என்று சொன்னார்.
எனவே, அந்த பணம் கைப்பற்றப்பட்டது. மேலும் அவரை
அழைத்துக்கொண்டு அவருடைய மாருதி ஆல்டோ K10 வாகன பதிவு எண்.TN

43 F 6280 உள்ள வாகனத்தை சோதனையிட காரின் பின்பக்க சீட்டிலிருந்த சூட்கேசில் பணம் ரூ.9,060/- இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். இதுபற்றி கேட்க இதுவும் பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் கொடுக்கவிருந்த பணம் என்று கூறினார். எனவே, அந்த பணமும் கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது சூட்கேசில் இருந்து ப்ளூ கலர் அட்டை போட்ட பாக்கெட் டைரி CANO NOTE BOOK No.405 என்பதையும் எடுத்து ஆஜர் செய்தார். அதுவும் கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக செயற்பொறியாளர் அறையின் முதல் தளத்திற்கு சென்று, இடது புறமுள்ள கணக்கு பிரிவிற்குச் செல்ல அங்கு உதவியாளர்கள் திரு.ப.சந்திரசேகரன், திரு.A.J.ஜெயபிரகாஷ், இளநிலை உதவியாளர் திரு.K.ராஜ்குமார் ஆகியோர் இருந்தனர். திரு.சந்திரசேகரன் அவர்களை தணிக்கை செய்ய அவர் தானகவே முன்வந்து அவருடைய பேண்டின் இடதுபுற பாக்கெட்டிலிருந்த பர்சிலிருந்து பணம் ரூ.1,830/-ஐ ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.ஜெயபிரகாஷை தணிக்கை செய்ய அவர் தன்னுடைய பேண்டின் வலதுபுற பின்பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.820/-ஐ ஆஜர் செய்தார். அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்றதால் திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.ராஜ்குமாரை தணிக்கை செய்ய அவர் தன்னுடைய சட்டையின் இடதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.430/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக கோட்ட கணக்கு அலுவலர் கேபின் இருந்தது. அந்த கேபின் இருக்கை காலியாக இருந்தது. அடுத்ததாக இருந்த கேபினில் NMR ஆக கம்ப்யூட்டர் ஆப்பரேட்டர் திரு.P.சம்பத்குமார் இருந்தார். அவரை தணிக்கை செய்ய அவர் தன்னுடைய பேண்டின் பின்பக்க பாக்கெட்டிலிருந்த பர்சிலிருந்து பணம் ரூ.630/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இருந்த கேபினில் இருந்த கண்காணிப்பாளர் திருமதி.சித்ரா சிறுவிடுப்பில் இருப்பதாக கூறினார்கள். அடுத்ததாக இருந்த நிறுவனப்பிரிவு கேபினில் உதவியாளர் திரு.R.சீனிவாசன் மற்றும் NMR ஆக திருமதி.மேரி குவின்டில்யா ஆகியோர் இருந்தனர். திரு.சீனிவாசனை தணிக்கை செய்ய

Sd/- 29/4/19

அவர் தானாகவே தன்னுடைய பேண்டின் பின்பக்க பாக்கெட்டிலிருந்த பர்சிலிருந்து பணம் ரூ.510/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திருமதி.மேரி குவின்டில்யா என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாகவே தன்னுடைய பர்சிலிருந்து பணம் ரூ.145/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது உதகமண்டலம் பொதுப்பணித்துறை அலுவலர்களும், ஊழியர்களும் கன்னியமாக நடத்தப்பட்டனர். திடீர் தணிக்கையின் போது மொத்தம் பணம் ரூ.2,01,560/- கைப்பற்றப்பட்டது. அவைகள் 2000 ரூபாய் நோட்டுக்களாக 42-ம், 500 ரூபாய் நோட்டுக்களாக 215-ம், 200 ரூபாய் நோட்டு ஒன்றும், 100 ரூபாய் நோட்டுக்களாக 61-ம், 50 ரூபாய் நோட்டுக்களாக 53-ம், 20 ரூபாய் நோட்டுக்களாக 4-ம் மற்றும் 10 ரூபாய் நோட்டுக்களாக 103-ம் ஆக மொத்தம் ரூ.2,01,560/-(ரூபாய் இரண்டு இலட்சத்து ஆயிரத்து ஐநூற்று அறுபது மட்டும்) ஆகும். இந்த திடீர் தணிக்கையானது இன்று (01.11.2018) 15.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 19.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இதை த.கா. திரு.நா.சக்தி என்பவர் லேப்டாபில் தட்டச்சு செய்தார். மேற்கண்ட புகாரின் நகல், செயல்முறை ஆணை நகல் மற்றும் இதர ஆவணங்களையும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொள்ள அனுமதி கோரி சென்னை இயக்குநர் அவர்களுக்கு நான் அனுப்பி வைத்தேன். 23.04.2019-ம் தேதி காலை வழக்கு பதிவு செய்ய சென்னை இயக்குநர் அலுவலகத்திலிருந்து அனுமதி ஆணை எண்.SC No.39735/2018/PWD/NI நாள்:11.04.2019-ன் படி கிடைக்கப்பெற்ற கடிதத்தின் படி நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்) மற்றும் பொறுப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.H.பிரகாஷ் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர் இன்று 29.04.2019 காலை அலுவலகம் வந்து 01.11.2018-ம் தேதி உதகமண்டலம் பொதுப்பணித்துறை கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்டம் மற்றும் கோட்ட அலுவலகத்தில் திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,01,560/-ஐயும், பாக்கெட் டைரியையும் ஆஜர் செய்தார். அதன் அடிப்படையில் நான் உதகமண்டலம்

Sangeethalakshmi
29/4/19

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 4/2019/AC/NI சட்ட பிரிவு 8 of PC (Amendment) Act, 2018 மற்றும் 102 கு.வி.மு.சவின் படி இன்று (29.04.2019) காலை 11.30 மணிக்கு வழக்கு பதிவு செய்து, இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல், அசல் புகார், அசல் செயல்முறை மற்றும் ஒப்பந்ததாரர் திரு.R.கோபாலகிருஷ்ணபிள்ளையிடமிருந்து கைப்பற்றப்பட்ட பாக்கெட் டைரி மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,01,560/-(ரூபாய் இரண்டு இலட்சத்து ஆயிரத்து ஐநூற்று அறுபது மட்டும்) ஆகியவற்றை படிவம் 91 மூலமாக கணம் உதவி அமர்வு நீதிபதி மற்றும் சிறப்பு நீதிபதி, உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

[signature] 29/4/19

(B.கீதாலட்சுமி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.